**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous
Preliminary Register — Case No.**CC.30/2018**

Deposition of — PW- 7 (LW- 10) /

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.ரமேஷ் | Father Name | : | பாலு |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | காவல் ஆய்வாளர், மேற்கு காவல் நிலையம், கும்பகோணம். |
| Religion | : | | Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20th day of March 2025.

எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவி 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எந்த தேதியில் S4, S26 வார்ட்டு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று விசாரணை மேற்கொண்டேன் என்றால் 10.02.2017 ம் தேதி சென்றேன். நேரம் சரியாக தெரியவில்லை. அ.சா.1 அப்போது சிகிச்சையில் சுயநினைவுடன் இருந்தார்என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் (மீதிபணம் ரூ.1000/−ஐ தருகிறேன் என் சொன்னதற்கு ஜெயபிரகாஷ் அதெல்லாம் முடியாது உடனே பணத்தை தரவில்லை என்றால் மரியாதை கெட்டுவிடும் என்று கெட்டவார்த்தையால் திட்டினார் உடனே நானும் திட்டினேன் ) என உள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் கட்டையால் அடித்து மிரட்டினார் என் கூறப்படவில்லை என்றால் சரிதான். 161 வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது. அ.சா.1 எதனால் சம்பவயிடத்திற்கு எதிரியை வரசொன்னார் என எனது விசாரணையில் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அது எதார்த்தமாக நடந்தது. சம்பவத்தின் போது எதிரி அ.சா.1ல் தாக்கப்பட்டு எதிரி கொடுத்த புகார் குற்ற எண்.34/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்

சரிதான். இந்த வழக்கில் அ.சா.1ன் மீது 294(b), 324, 307 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றாலும் அ.சா.1 எதிரிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தடய பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் ்இல்லை அ.சா.1க்கு கொடுத்த பொய் புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவயிடத்தை சுற்றி கண்ணுற்ற சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.3 அவரது சாட்சியத்தில் இரவு 08.00 மணிக்கு சம்பவம் குறித்து அவரது மாமியார் கூறியதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.1ன் மருத்துவ குறிப்புகளில் இரவு 01.45 மணிக்கு தான் சிகிச்சையில் சேர்க்கப்பட்டதாக குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சிகளாக சேர்க்கப்பட்டவர்கள் அ.சா.1ன் உறவினர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த விதமான தொடர்பு இல்லை என்றாலும் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

CINTHA

Digitally signed by CINTHA
Date: 2025.03.20 14:57:53 +0530